# இக்கால இலக்கியங்கள்

## (Foundation Tamil I - MCQ)

ஆசிரியர்
முனைவர் பு. எழிலரசி

## செயின்ட் ஜோசப் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
## தமிழ்த்துறை

## பொதுத்தமிழ் – தாள்-1 முதலாமாண்டு முதற்பருவம்

**தாள் குறியீடு - 23UGTA01**

**ODD SEM - (2023-2024)**

**ஆசிரியர்**

**முனைவர் பு.எழிலரசி**

**பொருளடக்கம்**

**பாடத் தலைப்புகள்**

**அலகு : 1**

**மரபுக் கவிதைகள்**

1.தமிழ்த் தெய்வ வணக்கம்  - பெ. சுந்தரனார்
2.சிறுத்தையே வெளியில் வா - பாரதிதாசன்
3.புத்தரும் சிறுவனும் - கவிமணி தேசிக விநாயகம்
4.மொழி உணர்ச்சி - முடியரசன்
5.ஆட்டனத்தி ஆதிமந்தி - ஆதிமந்தி புலம்பல் - கண்ணதாசன்
6.துறைமுகம் (வினாத்தாள்) சுரதா
7. கடல்- தமிழ் ஒளி

## அலகு : 2 புதுக் கவிதைகள்

1 வீட்டுக்கொரு மரம் வளர்ப்போம் - அப்துல் ரகுமான்
2 சென்ரியூ கவிதைகள் - ஈரோடு தமிழன்பன்
3.பிற்சேர்க்கை - வைரமுத்து
4.வாழைமரம் - மு.மேத்தா
5.வள்ளுவம் பத்து - அறிவுமதி
6.ஆனந்த யாழை மீட்டுகிறாய் - ந.முத்துக்குமார்
7.சபிக்கப்பட்ட முத்தம் - சுகிர்தராணி
8.நீ எழுத மறுக்கும் எனது அழகு இளம்பிறை

## அலகு : 3 – சிறுகதைகள்

1.வாய்ச்சொற்கள் (மாலை மயக்கம் தொகுப்பு --  ஜெயகாந்தன்
2.கடிதம் - புதுமைப்பித்தன்
3.கரு- உமா மகேஸ்வரி
4.முள்முடி - தி. ஜானகிராமன்
5.சிதறல்கள் - விழி.பா. இதயவேந்தன்
6.காகித உறவு சு. சமுத்திரம்
7.வீட்டின் மூலையில் சமையல்அறை - அம்பை
8.மொழிபெயர்ப்புக்கதை - ஆண்டன் செக்காவ்

## அலகு : 4 – இலக்கிய வரலாறு

1. 20-ஆம் நூற்றாண்டு கவிஞர் பெருமக்கள்
2. கவிதையின் வகையும், வளர்ச்சியும்

3. தமிழ்ச் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும்
4. மொழிபெயர்ப்புகள் தோற்றமும் வளர்ச்சியும்

**அலகு : 5 – மொழித்திறன்**

1. பொருள் பொதிந்த சொற்றொடர் அமைத்தல்
2 ஓர் எழுத்து ஒரு மொழி
3.வேற்றுமை உருபுகள்
4.திணை, பால், எண். இடம்
5.கலைச்சொல்லாக்கம், மொழிபெயர்ப்பு

**அலகு : 1 - மரபுக் கவிதைகள்**

1. நீரால் நிரம்பிய கடலை ஆடையாக உடுத்தியவள்
அ)பூமி எனும் பெண்
ஆ)வானம்
இகடல்
ஈ) மாதவி
விடை: அ

2.பூமி என்னும் பெண்ணின் முகமாக விளங்குவது
அ) ஐரோப்பியக் கண்டம்
ஆ) ஆப்பிரிக்கக் கண்டம்
இ) பரதக் கண்டம்
ஈ) ஆஸ்திரியக் கண்டம்
விடை:இ

3. நிலம் என்னும் நல்லாளின் நெற்றியாக விளங்குவது
அ) தக்காணம்
ஆ) மரக்கானம்
இ) வடபகுதி
ஈ) மேல் பகுதி

விடை: அ

4 எத்திசையும் புகழ் மணக்கக்கூடியது
அ) தமிழ்
ஆ) தெலுங்கு
இ) கன்னடம்
ஈ) மலையாளம்
விடை: அ

5. பிறைநுதலில் திலகமாக இருப்பது
அ) தமிழகம்
ஆ) கன்னடம்
இ) மலையாளம்
ஈ) உருது
விடை: அ

6. திறம்வியந்து செயல் மறந்து
அ) வணங்குதுமே
ஆ) வாழ்துதுமே
இ) போற்றுதுமே
ஈ) தூற்றுதுமே
விடை:ஆ

7. மடந்தை என்பதின் பொருள்
அ) ஆண்
ஆ) பெண்
இ) மண்
ஈ) பொன்
விடை : ஆ

8. அணங்கு என்பதின் பொருள்
அ) மண்
ஆ) பொன்
இ) பெண்
விடை: ஆ

9. ஆரும் என்னும் சொல்லின் பொருள்
அ) எழும்
ஆ) வீழும்
இ) ஒலிக்கும்
ஈ) ஒளிக்கும்
விடை: இ

10. என்றும் இளமையாக இருக்கும் மொழி.
அ) தெலுங்கு
ஆ) தமிழ்
இ) கன்னடம்
ஈ) மலையாளம்
விடை: ஆ

11. தரித்த என்பதின் பொருள்
அ) அணிந்த
ஆ) எழுந்த
இ) ஒலித்த
ஈ) ஒளித்த
விடை: அ

12. தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடல் அமைந்த பாவகை
அ) பஃறாழிசை கொச்சகக் கலிப்பா
ஆ) ஆசிரியப்பா
இ) ஒத்தாழிசைக் கொச்சகக் கலிப்பா
ஈ) வெண்பா
விடை – அ

13. தமிழக அரசு "நீராரும் கடலுடுத்த" என்ற பாடலை தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலாக அறிவித்த ஆண்டு
அ) 1975
ஆ) 1976
இ) 1970
ஈ) 1969

ST. JOSEPH'S COLLEGE FOR WOMEN

விடை – இ

14. பெ. சுந்தரனார் பிறந்த மாநிலம்
அ) கேரளம்
ஆ) கர்நாடகம்
இ) மலையாளம்
ஈ) தமிழகம்
விடை: அ

15. நூற்றொகை விளக்கம் பாடியவர்
அ) வ.உ.சிதம்பரம் பிள்ளை
ஆ) பெ. சுந்தரனார்
இ) காசு பிள்ளை
ஈ) காசிஆனந்தன்
விடை: ஆ

16. பெ.சுந்தரனார் மறைந்த ஆண்டு
அ)1970
ஆ)1897
இ)1890
ஈ) 1891
விடை: ஆ

17.மனோன்மணியம் பெ.சுந்தரனார் பிறந்த ஆண்டு எது?
அ)1955
ஆ)1856
இ)1857
ஈ)1855
விடை: ஈ

18. தெக்கணம் என்பது
அ) கீழ்ப்பகுதி
ஆ) மேல் பகுதி
இ) தென் பகுதி
ஈ) வட பகுதி
விடை: இ

19. சிறந்த 'திராவிட நல் திருநாடு' என்பது
அ) கேரளம்
ஆ) தமிழகம்
இகர்நாடகம்
ஈ) ஆந்திரம்
விடை: ஆ

20. தமிழ்த்தாய் வாழ்த்தினைப் பாடியவர்?
அ) கவிமணி
ஆ) பெ.சுந்தரனார்
இ நாமக்கல் கவிஞர்
ஈ) பாரதியார்
விடை : ஆ

21. தமிழ்த்தாய் வாழ்த்து இடம்பெற்ற நூல் எது?
அ) கேரளம்
ஆ) கர்நாடகம்
இ) மலையாளம்
ஈ) தமிழகம்
விடை: அ

22. மனோன்மணியம் நூல் தமிழ்த்தாய் வாழ்த்தினை எவ்வாறு கூறுகிறது?
அ)தெய்வப்பாடல்
ஆ) தமிழ்வாழ்த்து
இ தமிழ்த் தெய்வ வணக்கம்
ஈ) மொழிவணக்கம்
விடை: இ

23. நூற்றொகை விளக்கம் என்ற நூலை எழுதியவர்?
அ) மறைமலையடிகள்
ஆ) சுந்தரனார்
இ)உ.வே.சா
ஈ) சுந்தரசுவாமிகள்

விடை : ஆ

24. சுந்தரம்பிள்ளை பிறந்த மாநிலம் எது?
அ) கர்நாடகம்
ஆ) ஆந்திரா
இ ஒரிசா
ஈ) கேரளா
விடை : ஈ

25. மனோன்மணியம் நாடகத்தின் இடையே அமைந்துள்ள துணைக் கதை................
அ) சிவகாமி சரிதம்
ஆ) பொன்னியின் செல்வன்
இ) பார்த்திபன் கனவு
ஈ) திருவிதாங்கூர் வரலாறு
விடை : அ

26. லிட்டன் பிரபுவின் எந்த நூலைத் தழுவி மனோன்மணியம் எழுதப்பட்டது?
அ) ஆசிய ஜோதி
ஆ) இரகசிய வழி
இ) இரட்சண்ய பயணம்
ஈ) யுத்த பூமி
விடை:ஆ

27. பெ.சுந்தரம்பிள்ளையின் ஞான ஆசிரியர்...............
அ) உ.வே.சா.
ஆ)தெ.பொ.மீ
இ சுந்தர சுவாமிகள்
ஈ)மறைமலையடிகள்
விடை :இ

28. பெ. சுந்தரனாரின் சிறப்புப் பெயர்.............
அ) சொல்லின் செல்வர்
ஆ ராவ்பகதூர்

இ சிந்தனைச் சிற்பி
ஈ) சிலம்புச் செல்வர்
விடை:ஆ

29. Some mile stones in tamil litt. என்ற நூலை எழுதியவர்............

அ) கால்டுவெல்

ஆ) ஜி.யு. போப

இ)பெ.சுந்நரனார்

ஈ) வீரமாமுனிவர்

விடை : இ

30. தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலுக்கு இசையமைத்தவர்............

அ) எம். எஸ். விசுவநாதன்

ஆ) இளையராஜா

இ மகாலிங்கம்

ஈ) ஆபிரகாம் பண்டிதர்

விடை : அ

31. "தமிழ்ச் செய்யுள் நாடக இலக்கியத்தின் தந்தை எனப் போற்றப்படுபவர் யார்?

அ) சங்கரதாஸ் சுவாமிகள்

ஆ) பம்மல் சம்பந்தம்

இ அறிஞர் அண்ணா

ஈ) பெ. சுந்தரனார்

விடை : ஈ

32. "தமிழ் இலக்கியத்தில் கால ஆராய்ச்சியைத் தொடங்கி வைத்தப் பெருமை சுந்தரனாரையே சாரும் என்று கூறியவர்...............
அ) ஹார்வி
ஆ) வ.உ.சி.
இ)ச.வே.சு

ஈ) கா.சு.பிள்ளை
விடை : ஈ

33. தமிழ்த்தாய் வாழ்த்துப்பாடல் அமைந்த பாவகை............
அ) வெண்பா
ஆ) ஒத்தாழிசைக் கலிப்பா
இ) வஞ்சிப்பா
ஈ) பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா
விடை : இ

34. தமிழ்த்தாய் வாழ்த்தினை எவ்வளவு நேரத்திற்குள் பாடி முடிக்க வேண்டும்?
அ) 1 நிமிடம்
ஆ) 50 நொடி
இ) 1 1/2 நிமிடம்
ஈ) 55 நொடி
விடை : ஈ

35. "நீராருங் கடலுடுத்த" பாடல் தமிழக அரசால் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலாக அறிவிக்கப்பட்ட ஆண்டு?
அ)1969
ஆ)1970
இ)1967
ஈ) 1980
விடை : ஆ

36. பே.சுந்தரனார் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த நூல்கள்............
அ திருமுருகாற்றுப்படை, நெடுநல்வாடை, மதுரைக்காஞ்சி.
ஆ புறநானூறு, சிலப்பதிகாரம், அகநானூறு.
இ நெடுநல்வாடை, பட்டினப்பாலை, நாலடியார்.
ஈ) நற்றிணை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி
விடை:அ

37. மனோன்மணீயம் சுந்தரனார் பிறந்த நாள்..............
அ) 10.10.1880

ஆ) 5.4.1885
இ) 4.4.1885
ஈ) 6.6.1885
விடை:இ

38. சுந்தரனாரின் தந்தை யாருடைய நினைவாக, அவருக்குப் பெயர் வைத்தார்?
அ)மதுரை சோமசுந்தரக் கடவுள்
ஆ) குரு சுந்தரர்
இ) தேவாரம் பாடிய சுந்தரர்
ஈ) இவர் யாருமில்லை
விடை:அ

39. தமிழ்த்தாய் வாழ்த்து பாடப்படும் ராகம்.............
அ) பூபாள ராகம்
ஆ) மோகன ராகம்
இ) ஆலாபனை
ஈ) பிரயோகம்
விடை : ஆ

40.நூற்றொகை விளக்கம் வெளி வந்த ஆண்டு.............
அ)1885
ஆ)1894
இ)1888
ஈ)1890
விடை : இ

41. அலைகள் ஆர்ப்பரிக்கும் கடல் நீரை ஆடையாக உடுத்தியவள்............
அ) வானம்
ஆ) மலை
இ ராதை
ஈ) நிலமடந்தை
விடை : ஈ

42. நிலமடந்தையின் முகமாக எது விளங்குகிறதென சுந்தரனார் கூறுகிறார்?
அ) ஆசியா
ஆ) ஐரோப்பாக் கண்டம்
இ பரதக்கண்டம்
ஈ) அமெரிக்கக் கண்டம்
விடை : இ

43. நிலமகளின் நெற்றி............
அ) இமயம்
ஆ) பொதிகை
இ) வடபகுதி
ஈ) தென்னாடு
விடை : ஈ

44. எத்திசையிலும் புகழ் மணக்கக் கூடியது.............
அ) தமிழ்
ஆ) சமஸ்கிருதம்
இ)மலையாளம்
ஈ) தெலுங்கு
விடை : அ

45. தமிழ்த்தாய் வாழ்த்து பாடல் அமைந்த பாவகை.
அ) பஃறாழிசைக் கொஞ்சிக் கலிப்பா
ஆ) ஆசிரியப்பா
இ) ஒத்தாழிசை கொச்சகக் கலிப்பா
ஈ)வெண்பா
விடை:அ

46. தமிழக அரசு ”நீராரும் கடலுடுத்த” என்ற பாடலை தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலாக அறிவித்த ஆண்டு
அ) 1975
ஆ) 1976
இ) 1970
ஈ) 1969

விடை:இ 1970

## <u>கோடிட்ட இடங்களை நிரப்புக</u>.

47. திராவிட நல்
திருநாடு' எனப்படுவது <u>தமிழ்நாடு.</u>

48."வானார்ந்த பொதியின் மிசை வளர்கின்ற மதியே' எனத் தொடங்கும் பாடலும் தமிழ்த்தாய் வாழ்த்திற்குப் பரிந்துரைக்கப்பட்டது. அதனை எழுதியவர் <u>கந்தைக் கவியரசு</u>.

49. மனோன்மணியம் நாடக நூலை இரண்டாவது பதிப்பில் வெளியிட்டவர் - வையாபுரிப்பிள்ளை.

50. பெ. சுந்தரனார் தனது குருவான கோடக நல்லூர் <u>சுந்தர அத்வைதி</u> சுவாமிகளிடம் அத்வைத சிந்தனைகளைக் கற்றார்.

51. மனோன்மணியம் நாடகத்தைத் திருத்தியமைத்தவர் <u>உ.வே.சா.</u>

52. மனோன்மணியம் நாடகத்தின் உட்பொருள் <u>பரமாத்துவித வேதாந்தம்.</u>

53. பெ. சுந்தரனார் மறைந்த ஆண்டு <u>1897.</u>

54. மனோன்மணியம் நாடக நூல் <u>5</u> அங்கங்களையும் <u>20</u> களங்களையும் உடையது.

55. பெ. சுந்தரனாரின் தமிழாசிரியர் <u>நாகப்பட்டினம் நாராயணசாமி.</u>

56. சுந்தரனாரின் கல்வெட்டுக் கால ஆராய்ச்சி வெளியான ஆண்டு <u>1894.</u>

57. மனோன்மணீயம் சுந்தரனாரின் பெற்றோர் <u>பெருமாள். மாடத்தி அம்மாள்.</u>

58. ஆங்கில நாடக மரபின்படி தமிழில் உருவான முதல் செய்யுள் நாடகம் <u>மனோன்மணீயம்.</u>

59. திருவிதாங்கூர்ப் பண்டை மன்னர் கால ஆராய்ச்சி என்ற நூலை எழுதியவர் <u>மனோன்மணீயம் சுந்தரனார்.</u>

60.மனோன்மணீயம் சுந்தரனார் பெயரில் பல்கலைக்கழகம் நிறுவப்பட்ட ஆண்டு 1990.

61. சுந்தரனாரின் பாடல்களும், கட்டுரைகளும் பெரும்பாலும் வெளிவந்த இதழ் விவேக சிந்தாமணி.

62. திருஞானசம்பந்தரைத் திராவிட சிசு என ஆதிசங்கரர் கூறியதை முதலில் கூறியவர் பெ. சுந்தரனார்.

63. சுந்தரனாருக்கு கல்வெட்டு ஆய்விற்காக பிரிட்டிஷ் அரசு MRAS, என்ற பட்டத்தையும் தொல்லியல் ஆய்வாளருக்கான லண்டன் வரலாற்று ஆய்வு மையம் FRHS என்ற விருதையும்ஂj வழங்கியது.

64. மனோன்மணீயம் திரைப்படம் 1942 -இல் வெளிவந்தது.

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

65. பாரதிதாசனின் இயற்பெயர் என்ன?
அ) கனகசபை
ஆ) கனகசபாபதி
இ பாரதிதாசன்
ஈ) கனகசுப்புரத்தினம்
விடை : ஈ

66. பாரதிதாசன் பிறந்த ஆண்டு
அ) 1891
ஆ) 1890
இ) 1895
ஈ) 1964
விடை : அ

67. பாரதிதாசன் பிறந்த ஊர்
அ) திருச்சி
ஆ) புதுச்சேரி
காரைக்கால்
ஈ) மதுரை

விடை : ஆ

68. பாரதிதாசனின் தந்தை பெயர்
ஆ கப்பையா
ஆ) சுப்புரத்தினம்
இ கனகசபை முதலியார்
விடை :இ

69. பாரதிதாசனின் எந்த நூல் சாகித்திய அகாடமி விருது பெற்றது?
அ) பாண்டியன் பரிசு
ஆ) குடும்ப விளக்கு
இ இருண்ட வீடு
ஈ) பிசிராந்தையார்
விடை : ஈ

70. பாரதிதாசன் படைப்புகளில் எது? 'குறள் ஓவியம்' என்ற மதிப்பைப் பெற்ற நூல்
அ) இருண்ட வீடு
ஆ) குடும்ப விளக்கு
இ பாண்டியன் பரிசு
ஈ) அழகின் சிரிப்பு
விடை : ஆ

71. பாரதிதாசன் ஆசிரியராகப் பணியாற்றிய ஊர்
அ) புதுச்சேரி
ஆ) நிரவி
இ) காரைக்கால்
ஈ) மதுரை
விடை : ஆ

72. பாரதிதாசன் எழுதிய நூல்
அ கண்ணன் பாட்டு
ஆ புரட்சிக்கவி
ஆ) குயில் பாட்டு
ஈ) ஞானரதம்

விடை : இ

73. எங்கெங்கு காணினும் சக்தியடா என்று பாடியவர்
அ) பாரதியார்
இ பாரதிதாசன்
ஆ) கவிமணி
ஈ) நாமக்கல் கவிஞர்
விடை : இ

74. பாரதிதாசன் பிசிராந்தையார் நாடகத்திற்கு சாசித்திய அகாடமி விருது பெற்ற ஆண்டு

அ) 1970
ஆ) 1965
இ) 1969
ஈ) 1968
விடை : இ

75. "ஆவேசத்தையும் உணர்ச்சியினையும் வெள்ளமாகக் கொட்டும் உயர்கவி பாரதிதாசன் என்று கூறியவர்

அ) மு.வ.
ஆ) வ.ரா.
இ) உவே.சா.
ஈ) வ.வே.சு.
விடை: ஆ

76. பாரதிதாசன் பாரதியாருக்கு முன் பாடிய முதல் பாடல் எது?
அ) புதியதோர் உலகம் செய்வோம்
ஆ) தமிழுக்கும் அமுதென்று பேர்
இ எங்கெங்கு காணினும் சக்தியடா
ஈ) காடு களைந்தோம்
விடை :இ

77. 'சேரதாண்டவம்' படைப்பு எவ்வகையானது?
அ) சிறுகதை
ஆ) புதினம்
இ) கவிதை
ஈ) நாடகம்
விடை : ஈ

78. 'தன்மான இயக்கத்தின் சிறந்த பாதுகாவலர்' என பாரதிதாசனைப் பாராட்டியவர்

அ) பெரியார்
ஆ) பாரதியார்
இ) அண்ணா
ஈ) வீரமணி
விடை : அ

79. பாரதிதாசன் பல்கலைக்கழகம் அமைந்துள்ள மாவட்டம் எது?
அ) சேலம்
ஆ) கோவை
இ திருச்சி
ஈ) மதுரை
விடை : இ

80. பாரதிதாசன் தொடக்கக் கல்வி கற்ற ஆசிரியர்
அ) பெரியசாமி
இ பரதேசியார்
ஆ) திருப்புளிசாமி
ஈ) சுப்ரதீபக்கவிராயர்
விடை : ஆ

81. 1908-இல் யாருடைய வீட்டுத் திருமணத்தில் பாரதியாரை பாரதிதாசன் சந்தித்தார்?
அ) வேணுநாயகர்
இ குஞ்சிதம்
ஆ) மாயூரம் நடராசன்
ஈ) வேங்கடசாமி
விடை : அ

82. பாரதிதாசன் பிரெஞ்சு அரசால் குற்றம் சாட்டப்பட்டுச் சிறை சென்ற காலம்
அ) 2 ஆண்டுகள்
ஆ) 15 மாதம்
இ) 6 மாதம்
ஈ) ஓராண்டு

விடை : ஆ

83. பாரதிதாசனின் மனைவி பெயர்
அ செல்லம்மாள்
ஆ) இலக்குமி அம்மையார்
இ) பழனியம்மாள்
ஈ) மணியம்மான்
விடை : ஈ

84. பாரதிதாசன் ஒரே இரவில் எழுதிய நூல் எது?
அ) நல்ல தீர்ப்பு
ஆ) தமிழியக்கம்
இ) பர்வதக்கவி
ஈ) முல்லைக்காடு

85. பாரதிதாசனுக்கு புரட்சிக்கவி என்ற பட்டம் வழங்கியவர்.
அ) பெரியார்
ஆ) பாரதியார்
இ) அறிஞர்அண்ணா
ஈ) கல்கி
விடை : இ

86. பாரதிதாசன் நினைவு அஞ்சல் தலை வெளியிடப்பட்ட ஆண்டு?
அ) 2002
ஆ) 2001
இ) 2004
ஈ) 2000
விடை : ஆ

87. பாரதிதாசன் இயற்கை எய்திய ஆண்டு
அ) 1963
ஆ) 1962
இ) 1964
ஈ) 1965
விடை : இ

88. 'மாவலிச் செலவு' பாடல் எங்கிருந்தபோது பாரதிதாசனுக்கு உருவானது?

அ) சென்னை

ஆ) புதுவை

இ) மாமல்லபுரம்

ஈ) புவனகிரி

விடை : இ

89. 'சிறுத்தையே வெளியில் வா' என்ற பாரதிதாசனின் படல் இடம்பெற்ற பகுதி எது?

அ) திராவிடன்

இ) இயற்கை

ஆ) புதிய உலகம்

ஈ) திராவிட நாடு

விடை : அ

90. பகைவர்கள் தமிழரை எதுவென இகழ்ந்ததாகப் பாரதிதாசன் கூறுகிறார்?

அ) புலி

ஆ) சிங்கம்

இ எலி

ஈ) பறவை

விடை : இ

91. தமிழன் எதைப் போல செயல் செய்யப் புறப்பட வேண்டும்?

அ). யானை

ஆ) புலி

இ சிங்கம்

ஈ) சிறுத்தை

விடை : ஆ

92. எந்தப் பறவையைப் போல சிறகை விரிக்க வேண்டும்?

அ கழுகு

ஆ) மயில்

இ கிளி
ஈ) சிம்புப்பறவை
விடை : ஈ

93. பூண் என்பதன் பொருள்
அ) பூட்டு
ஆ கவசம் போல் அணியும் அணிகலன்
இ) இரும்பு
ஈ) விலங்கு
விடை : ஆ

94. வையம் ஆண்ட மரபு எது?
அ) தமிழ்
ஆ) ஆங்கிலேயர்
இ களப்பிரர்
ஈ) நவாபு
விடை : அ

95. கவிமணி பிறந்த ஆண்டு
அ) 1876
ஆ) 1886
இ) 1856
ஈ) 1889
விடை : அ

96. 1938-ஆம் ஆண்டு வெளியான கவிமணியின் நூல் எது?
அ) ஆசியஜோதி
ஆ) மலரும் மாலையும்
இ) மருமக்கள் வழி மான்மியம்
ஈ) காந்தளூர் சாலை விடை: அ

97. கவிமணி பிறந்த ஊர்
அ தேரூர்
ஆ) தக்கலை
பேரூர்

ஈ) கருங்கல்
விடை: அ

98. கவிமணியின் பெற்றோர் பெயர்
அ) சின்னச்சாமி - இலக்குமி
ஆ) கனகசபை - சரஸ்வதி
இ) சிவதாணு - ஆதிலெட்சுமி
ஈ) சாத்தப்பன் - விசாலாட்சி
விடை: அ

99. பாரசீகக் கவிஞர் உமர்கய்யாம் பாடல்களை மொழிபெயர்த்தன
அ) கிருஷ்ணப்பிள்ளை
இ) பெ.சுந்தரனார்
ஆ) நாமக்கல் கவிஞர்
ஈ) தேசிக விநாயகம் பிள்ளை
விடை – ஈ

100. கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையின் மனைவி பெயர்
அ) பார்வதி
ஆ) உமையம்மை
இ) மலைமகள்
ஈ) ஆதியம்மை
விடை: ஆ

101. குழந்தைப் பாடல்களைத் தொடர்ச்சியாக முதன் முதலில் எழுதிய கவிஞர்
அ) அழ. வள்ளியப்பா
ஆ) நாமக்கல் கவிஞர்
இ பாரதியார்
ஈ) கவிமணி
விடை: ஈ

102. தேசிக விநாயகம் பிள்ளைக்குக் கவிமணி பட்டம் வழங்கியவர் யார்?

அ) சிவப்பிரகாசர்
இ) பாரதிதாசன்
ஆ) உமாமகேசுவரனார்
ஈ) தம்பிரான் அடிகள்
விடை :ஆ

103. ஆசிய ஜோதி எந்த நூலைத் தழுவி எழுதப்பட்டது?
அ) The Light of Asia
ஆ) Mahisaasaga
இ) Samyuktha
ஈ) Hinayana
விடை : அ

104. கவிமணி தொகுத்த நூலின் பெயர்
அ) குறுந்தொகை
ஆ தேவாரம்
இ) நவநீதப்பாட்டியல்
ஈ) நீதிநெறி
விடை: இ

105. கவிமணிக்குப் பெரும் பொருள் வழங்க முன்வந்தவர்
அ) ராஜா அண்ணாமலை
ஆ) சடையப்ப வள்ளல்
இ) அதியமான்
ஈ) கண்ணதாசன்
விடை: அ

106. 'தேடிப் பார்த்தாலும் சாதி தெரிவதுண்டா அப்பா?' எனக் கூறியவர் யார்?
அ) பாரதிதாசன்
ஆ) ஈ.வெ.ரா. பெரியார்
இ கவிமணி
ஈ) ராமலிங்கம் பிள்ளை
விடை : இ

107. தேசிக விநாயகம் பிள்ளை இறந்த ஆண்டு
அ) 1955
ஆ) 1957
இ) 1954
ஈ) 1956
விடை : ஆ

108. "ஆயுள் நாள் முழுவதும் தமிழ் மகன் தன்னுடன் வைத்துக் கொண்டு அனுபவிக்கக் கூடிய வாடாத கற்பகப் பூச்செண்டு கவிமணி" என்ற கூற்று யாருடையது?
அ) டி.கே.சி
ஆ) மு.வ.
இ) டி.கே. சண்முகம்
ஈ) நாமக்கல் கவிஞர்
விடை : அ

109. உமர்கய்யாம் பாடல்களை எந்தத் தலைப்பில் கவிமணி மொழிபெயர்த்தார்?
அ) பாரசீகக் கவிதைகள்
ஆ) ரூபாயைத்
இ) ஆசிய ஜோதி
ஈ) மலரும் மாலையும்
விடை : ஆ

110. கவிமணி மொழிபெயர்த்த ஆங்கில மொழி குழந்தைப் பாடல் எது?
அ) The Moon
ஆ) Baby
இ) The Rain
ஈ) The Sun
விடை : இ

111. இயக்கம் சாரா இனிமைக் கவிஞர்
அ) கண்ணதாசன்
இ) கவிமணி
ஆ) சுந்தரனார்
ஈ) பிச்சமூர்த்தி
விடை : இ

112. கவிமணிக்கு இலக்கிய இலக்கணங்களைக் கற்றுக் கொடுத்தவர்
அ) சாந்தலிங்கத் தம்பிரான்
ஆ) உமாபதி
இ) பாரதிதாசன்
ஈ) சுந்தரலிங்கம்
விடை : அ

113. ஆயர்குலச் சிறுவனுக்குப் 'பிறப்பினால் உயர்வு தாழ்வுகள் பாராட்டலாகாது' என்று போதித்தவர் யார்?
அ) கவிமணி
ஆ) வால்ட் விட்மன்
இ) புத்தர்
ஈ) ஔவை
விடை : இ

114. புத்தரின் மனைவி பெயர்
அ) யசோதரை
இ வாசுகி
ஆ ராதை
ஈ) சம்யுக்தா
விடை : அ

115. வையகம் வாழ்ந்திடவே பிறந்த மாதவச் செல்வன்" யார்?
அ) சிறுவன்
ஆ) கவிமணி
இ புத்தர்
ஈ) திருமால்
விடை - இ

116. புத்தர் மீது வெயில் படாமல் இருக்க இடையர் குல சிறுவன் த**ழை** கொண்டு மறைத்தான்?
அ) துணி
ஆ) தழைகள்
இ குடை
ஈ பாய்
விடை: ஆ

117. "கலத்தினிலே கொஞ்சம் பாலைக் கறந்து தருவாய்" என புத்தர் யா கேட்டார்?

அ) வழிப்போக்கன்

ஆ) காவலன்

இ) ஆயர்குலச் சிறுவன்

ஈ) ஊர் மக்கள்

விடை : இ

118. சாதி எதில் தெரிவதில்லை என்றார் புத்தர்?

அ) உடை

ஆ) உணவு

இ இரத்தம்

ஈ) நிறம்

விடை : இ

119. செய்பவரே உலகம் நாடும் மேற்குலத்தார்.

அ) தின்மை

ஆ) போர்

இ நன்மை

ஈ) தொழில்

விடை : இ

120. கவிஞர் முடியர்களின் இயற்பெயர்

அ) தனுசாமி

ஆ) துரைராசு

இ வானம்பாடி

ஈ) சுப்பு

விடை – ஆ

121. யானை திராவிட நாட்டின் வானம்பாடி' எனப் புகழ்ந்தவர் யார்?

அ பெரியார்

ஆ) பாரதிதாசன்

இ) அறிஞர் அண்ணா

ஈ) குன்றக்குடி அடிகளார்

விடை – இ

122. பூங்கொடி என்ற நூலை எழுதியவர் யார்?
அ) பாரதிதாசன்
இ அறிஞர் அண்ணா
ஆ) முடியரசன்
ஈ) கண்ணதாசன்
விடை - ஆ

123. கவிஞர் முடியரசனின் பெற்றோர் பெயர் என்ன?
அ) துரைராக கலைச்செல்வி
ஆ) சுப்புராயலு - சீதாலெட்சுமி
இ) கனகசபை இலட்சுமி
ஈ) அருணாச்சலம் விசாலாட்சி
விடை : ஆ

124. முடியரசனின் பிறந்த ஆண்டு, கீழ்க்கண்டவற்றுள் எது சரி?
அ) 07.10.1920
ஆ) 09.10.1910
இ) 05.12.1920
ஈ) 07.10.1921
விடை : அ

125. முடியரசனின் சாதிமறுப்புத் திருமணத்தில் துணைவியாரானவர்
அ) கலையமுது
இ கயல்விழி
ஆ கலையரசி
ஈ) கலைச்செல்வி
விடை : ஈ

126. முடியரசனுக்குக் 'கவியரசர்' பட்டமும் பொற்கிழியும் வழங்கியவர் யார்?
அ) பாரதிதாசன்
இ) குன்றக்குடி அடிகளார்
ஆ) பெரியார்
ஈ) பேரறிஞர் அண்ணா
விடை : இ

127. 'பாவரசர்' 'பொற்பேழை' என்ற பட்டங்களை முடியரசனுக்கு

வழங்கியவர் யார்?
அ) கலைஞர் கருணாநிதி
ஆ) தேவ நேயப்பாவாணர்
இ) அறிஞர் அண்ணா
ஈ) குன்றக்குடி அடிகளார்
விடை : ஆ

128. முடியரசனின் 'சாதி என்பது நமக்கு ஏனோ?' என்ற முதன் முதலில் அச்சிடப்பட்ட கவிதை வெளியான இதழ் எது?
அ) தினமணி
இ தினவர்த்தமானி
ஆ) இந்தியா
ஈ) திராவிட நாடு
விடை : ஈ

129. தன்மான இயக்கத் தொடர்பால் 'வித்துவான் தேர்வில் தோல்வியுறுமாறு செய்யப்பட்டவர் யார்?
அ) அறிஞர் அண்ணா
ஆ) முடியரசன்
இ பெரியார்
ஈ) அடிகளார்
விடை : ஆ

130. பாரதிதாசனின் பரம்பரைக் கவிஞராக முடியரசனை அறிமுகப்படுத்திய இதழ்
அ) முல்லை
ஆ) இந்தியா
இ குயில்
ஈ) பொன்னி
விடை : ஈ

131. முடியரசனின் சாதி மறுப்புத் திருமணம் யாருடைய தலைமையில் நடந்தது?
அ) மயிலை சிவமுத்து

இ குன்றக்குடி அடிகள்
ஆ) பெரியார்
ஈ) பாரதிதாசன்
விடை :அ

132. மூத்தன்றல் முடியரசளே என்றுமுடியரசனைப் பாராட்டியவர்
அ) பாரதியார்
ஆ) பாரதிதாசன்
இ நாமக்கல் கவிஞர்
ஈ) பெரியார்
விடை - ஆ

133. முடியரசன் பாடல் எழுதிய திரைப்படம்
அ வசந்த மாளிகை
ஆ) பெண்மை வெல்க
இ கண்ணாடி மாளிகை
ஈ) அடிமைப் பெண்
விடை - ஆ

134. முடியுரசள் கவிதை வெளிவந்த மலேசிய இதழ் எது?
அ) அமுதசுரபி
ஆ) நித்திலக் குவியல்
இ) தாமரை
ஈ) தமிழ்நேசன்
விடை - ஈ

135. முடியரசளின் கவிதைகள் மொழிபெயர்க்கப்பட்ட முதல் வெளிநாட்டு
அ) இயத்தின்
ஆ) ஆங்கிலம்
இ பிரெஞ்சு
ஈ) ருஷ்யமொழி
விடை – ஈ

136. கவிஞர் முடியரசனின் படைப்புகள் தமிழக அரசால், ஆண்டு எது? நாட்டுடைமையாக்கப்பட்ட ஆண்டு

அ) 2005

ஆ) 2002

இ) 2000

ஈ) 2001

விடை - இ

137. எந்த இனம் விழித்தெழுந்தால் விடிவு தோன்றும் எனகூறுதா
அ தமிழினம்
இ பெண்ணினம்
ஆ) இளைஞர்
ஈ) இந்தியர்
விடை – ஆ

138. தாய் தவித்துத் தலத்திருக்க அறம் செய்ய முனைதல் நன்றோ?ன பாடியவர் யார்?

அ) கண்ணதாசன்

ஆ) வைரமுத்து

இ) கல்யாண சுந்தரனார்.

ஈ) முடியரசன்

விடை - ஈ

139. 'வேதாரண்யம்' என்ற ஊரின் பழைய பெயராக முரச கூறுவது

அ) மறைக்காடு

ஆ திருவாரூர்

இ) காரைக்குடி

ஈ) சென்னை

விடை:அ

140. கூறுகிறார். எனச் சொல்பவரைக் கட்சி சார்த்தி விடுவதாக முடியரசன்

அ) வெல்க தமிழ்

ஆ] வணக்கம்

இ) செம்மொழி
ஈ) தமிழ் வாழ்க
விடை - ஆ

141. பிறமொழியின் அடிமைகளே என்று சொன்ன குனக்குன்று.

அ) பாரதிதாசன்
இ காந்தியடிகள்
ஆ) பட்டுக்கோட்டை
ஈ) கண்ணதாசன்
விடை :இ

142. தமிழ் மொழியை 'உயர்தனிச் செம்மொழி என ஆராய்ந்து கூறியவர்
அ) மறைமலையடிகள்
ஆ) தேவநேயப் பாவாணர்
இ) பரிதிமாற்கலைஞர்
ஈ) திரு.வி.க.
விடை :இ

143. அமுதமெனத் தாய்மொழியைப் போற்றும் நாடு வீழ்ந்ததில்லை" எனக் கூறியவர்.
அ) தாகூர்
இ) மறைமலையடிகள்
ஆ) திரு.வி.க.
ஈ) முத்துசிவன்
விடை - ஈ

144. தமிழ் பிழையோடு காணப்படுமிடம் எது என்கிறார் முடியரசன்
ஆ) மந்திரம்
அ) மணவினை
இ ஆவணம்
ஈ) கல்வித்துறை
விடை :இ

145. அணு அளவும் மொழி உணர்ச்சி இல்லாத நாட்டில் எது வளராது என்கிறார் முடியரசன்?
அ) பொருளாதாரம்
இ அரசியல்
ஆ) கல்வி
ஈ) இறையுணர்ச்சி
விடை – ஈ

146. 'அன்பனை இழுத்துச் சென்ற தேவி' என்ற இவ்வரியில் தேவி என்பது

யார்?
அ) மருதி
ஆ காவிரி
இ மந்தி
ஈ) பெண் தெய்வம்
விடை : ஆ

147. காவிரித்தெய்வத்திடம் யாரை வேண்டிக் கேட்டாள் ஆதிமந்தி?
அ) ஆட்டனத்தி
ஆ) ஆதித்தன்
இ) கரிகாலன்
ஈ) பராந்தகன்
விடை : அ

148. மகளாகிய ஆதிமந்தியின் பின்னால் தொடர்ந்து சென்றவன் யார்?
அ) பாண்டியன்
ஆ) சோழன்
இ சேரன்
ஈ) பல்லவன்
விடை : ஆ

149. ஆதியை நோக்கிச் செல்லும் அடியினைத் தொடர்ந்து சென்றவள் யார்?
அ) மருதி
ஆ) மீனவப்பெண்
இ) ஆதிமந்தி
ஈ) பொன்னி
விடை : இ

150. ஆதிமந்தி, கொதித்தெழுந்த நெஞ்சை ஆற்ற மார்பின்மீது எதனை வைத்துத் தேற்றினாள்?
அ) முகம்
ஆ) ஆடை
இ கூந்தல்
ஈ) கைகள்
விடை : ஈ

151. பாதை தோன்றிட ஒளியை நல்கத் தோன்றியவள் யார்?
அ) நிலா
இ) மின்மிணி
ஆ) நட்சத்திரம்
ஈ) விளக்கு
விடை: அ

152. பொய்யோடு வந்த புன்மைப் புழக் கூட்டம் எதனைக் கொடுத்து ஆட்டனத்தியை கவர்ந்து சென்றதாக ஆதிமந்தி கூறினாள்?
அ) பொன்
இ வாள்
ஆ) கையூட்டு
ஈ) வீரம்
விடை: ஆ

153. நெஞ்சம் அமைதியுற நேயனைக் கொண்டது யார்?
அ) பொன்னிஆறு
இ கிணறு
ஆ) கடல்
ஈ ஏரி
விடை: அ

154. ஆதிக்கு வாய்ந்த அழகன் யார்?
அ) சோழன்
இ) ஆட்டனத்தி
ஆ) மீனவன்
ஈ) பாண்டியன்
விடை: ஆ

155. எத்தனை நாட்களாக ஆட்டனத்தியைத் தேடிச் சென்றாள்?
அ) 3 நாள்
இ) 5 நாள்
ஆ) 2 நாள்
ஈ) 1 நாள்
விடை: ஆ

156. கைப்பிடி மலராள் மேனி எவ்வாறு மாறியது?

அ) பசலை
இ) சருகு
ஆ) தளிர்
ஈ) பாலை நிலமரம்
விடை: இ

157. கரிகாற் சோழனின் மகள் பெயர்
அ) மருதி
ஆ) ஆட்டனத்தி
இ பொன்னி
ஈ) ஆதிமந்தி
விடை: ஈ

158. மனிதன் பழுதிலாத பயிற்சியை எதில் பெற வேண்டும் என சுரதா கூறுகிறார்?
அ) கேள்வி
ஆ) கல்வி
இ) அரசியல்
ஈ) கொடை
விடை - ஆ

159. ஆத்தாள் இல்லாமல் பிறந்தது எதுவென சுரதா சுட்டிக் காட்டுகிறார்?
அ) வினாத்தாள்
ஆ) கல்வி
இ) பணம்
ஈ) பட்டம்
விடை அ

160. மாணவர்களை, வினாத்தாள் எத்தனை முறை சந்திப்பதாக சுரதா கூறுகிறார்?
அ) 10
ஆ) 2
இ) 3
ஈ) 4
விடை :இ

161. கவிஞர் சுரதா 'வினாத்தாள்' கவிதையில் குறிப்பிடும் 'நான்' என்பது

யார்?
அ) விடை
ஆ) அறிவு
இ கல்வி
ஈ) வினாத்தாள்
விடை : ஈ

162. வினாத்தாளைக் கிழித்து எறிந்தால் கிடைக்காதது எது?
அ) மதிப்பெண்
ஆ) பட்டம்
இ) கல்வி
ஈ) ஞானம்
விடை : ஆ

163. உலகம் ஒருவனை, எழுவாய், பயனிலை என்று எப்போது சொல்லும்?
அ) பொருளாதாரமின்மை
ஆ) கல்விப் பயிற்சியின்மை
இ இலவசமின்மை
ஈ) அறம் இன்மை
விடை : ஆ

164. கதையை எழுதியவர் யார்?
அ) புதுமைப்பித்தன்
ஆ) அண்ணா
இ) தமிழ்ஒளி
ஈ) கருணாநிதி
விடை: இ

165. தன்கடல் வானில் மாலை நேரத்தில் குளித்தது எது?
அ) மீன்கள்
ஆ) படகுகள்
இ) நிலா
ஈ) விண்மீன்கள்
விடை : ஈ

166. நீள்கடலில் புறப்படக் காத்திருந்தது

அ படகு
ஆ) கப்பல்
இ) முகில்
ஈ) அலைகள்
விடை: ஆ

167. படகுகள் கடலில் மிதக்கும் காட்சி எவ்வாறு இருந்தது?
ஆ) துன்ப நிழல்
அ வானிடை முகில்
ஈ) விண்மீன்கள்
விடை : அ

168. துன்ப நிழலைப் போல நின்றிருந்தவர்கள் யார்?
அ செல்வந்தர்
ஆ) திருடர்
இ பரதவர்
ஈ) காவலர்
விடை : இ

169. பரதவர் வாழ்க்கை எதனைப் போன்றது?
அ) அலை
ஆ வானம்
இ நிலவு
ஈ) சூரியன்
விடை : அ

170. இருள் என்னும் துயரே வாழ்வாம் என்கிறார் தமிழ்ஒளி.
அ நிலை
ஆ ஏழைகள்
இ செல்வர்
ஈ) கவிஞர்
விடை: ஆ

171. எழைகளின் கண்ணீர்த் துயரை ஓலமிட்டு உலகெல்லாம் கூற கவிஞர் யாரை அழைக்கிறார்?
அ கடல்
ஆ) மீனவர்

இ செல்வர்
ஈ) ஞானியர்
விடை: அ

172. திரைகடல் ஓடியும் திரவியம் தேடுவோர் யார்?
அ) தொழிலாளர்
ஆ செல்வர்
இ மீனவர்
ஈ) வணிகர்
விடை : ஆ

173. நாளும் கையலுத்திட உழைத்திடும் ஏழை, கடலிடைப் பறக்கும் எதனைப் போன்றவர் ஆவார்?
அ) விமானம்
ஆ) நாவாய்
இ காகம்
ஈ) கழுகு
விடை : இ

174. ஏழை விடும் கண்ணீர் ஆறாகப் பெருகி உன்னிடம் வந்து கேட்கும்.
அ) பொன்
ஆ) பொருள்
இ கப்பல்
ஈ) உதவி
விடை : ஈ

175. எதைப் போலச் சீறி, ஏழைக்கு உதவ வேண்டும் எனத் தமிழ்ஒளி கூறுகிறார்?
அ) புலி
இ பாம்பு
ஆ) ஊழி
ஈ) சிங்கம்
விடை : ஆ

**அலகு : 2**

## புதுக் கவிதைகள்

176. 'வீட்டுக்கொரு மரம்' கவிதை இடம்பெற்ற நூல் எது?
அ) பால்வீதி
ஆ) சுட்டுவிரல்
இ) பித்தன்
ஈ) பாலை நிலா
விடை ஆ

177. வீடு இல்லாதவர்களுக்கு அடைக்கலம் தரும் இலவச இடம்
அ) குகை
ஆ) கூடு
இ மரம்
ஈ) மலை
விடை : இ

178. கடன்களால் அப்பா மகனின் படித்தார்.
அ) புத்தகம்
ஆ) இலட்சியம்
இ) கடிதம்
ஈ) பாடம்
விடை: இ

179. மகன் எங்கிருந்து கடிதம் அனுப்பியதாகக் கவிஞர் கூறுகிறார்?
அ) பள்ளி
ஆ) கல்லூரி
இ பணிசெய்யும் இடம்
ஈ) வீடு
விடை: ஆ

180. வெளியே சென்று வந்த கடவுள் எவ்வாறு நின்றார்?
அ) சிலை
ஆ) மனிதன்
இ) நெருப்பு
ஈ) மரம்
விடை - அ

181. கடவுளின் கோவிலில் காணாமல் போனது என்ன?

அ) உண்டியல்
ஆ) மலை
இ சிலை
ஈ) கிரீடம்
விடை - இ

182. அண்ணனின் தலைமாட்டில் தம்பி எதை வைத்தான்?
அ) பணம்
ஆ) ஊதுபத்தி
இ) விளக்கு
ஈ) அரிசி
விடை - ஆ

183. அண்ணன் தலைமாட்டில் ஊதுபத்தி வைத்தவன் யார்?
அ) திருடன்
ஆ) பகைவன்
இ உறவினன்
ஈ) தம்பி
விடை - ஈ

184. தொட்டி மீன் எங்கு விடப்பட்டதாகத் தமிழன்பன் கூறுகிறார்?
ஈ) கடல்
அ) ஆறு
ஆ) குளம்
இ) ஏரி
விடை: ஆ

185. தொட்டி மீன் அகற்றப்பட்டதும் தொட்டி எவ்வாறு மாறியது?
அ) அழகு
ஆ) வெறுமை
இ) வாசனை
ஈ) ஒளி
விடை: அ

186. தண்டனைகளை வைத்துக் கொண்டு ஆளை எதற்காகத் தேடுகின்றனர்?

அ) சிறைபிடிக்க
இ) சிறப்பிக்க
ஆ) விசாரணை
ஈ) இவை
விடை - ஆ

187. தண்டனைகளை வைத்துக்கொண்டு ஆளைத் தேடும் விசாரணை எந்த துறையை விமர்சிக்கிறது?
அ) நிதித்துறை
இ நீதித்துறை
ஆ) சமூகத்துறை
ஈ) நிர்வாகத்துறை
விடை: இ

188. ஆனந்த யாழை மீட்டுகிறாய் என்ற பாடல் இடம் பெற்ற திரைப்படம்
அ) அழகி
ஆ) தங்க மீன்கள்
இ) வெயில்
ஈ) நிலா
விடை - ஆ

189. ஆனந்த யாழை மீட்டுகிறாய் என்ற பாடலை இயற்றிய கவிஞர்.
அ) பா விஜய்
இ பழனி பாரதி
ஆ) வைரமுத்து
ஈ) நா. முத்துக்குமார்
விடை: ஈ

190. மகள், நெஞ்சில் எதனைத் தீட்டுகிறாள் என கவிஞர் கூறுகிறார்?
அ) வண்ணம்
ஆ) மழைத்துளி
இ வாசம்
ஈ) கடல் நிறம்
விடை அ

191. குடையாக நீண்டது எது?
அ) மழைத்துளி
ஆ) பனி

இ) மேகம்
ஈ) அன்பு
விடை - ஈ

192. இரு நெஞ்சங்கள் பேசும்போது எது தேவையில்லை?
அ) அன்பு
ஆ) மொழி
இ) உணவு
ஈ) பொன்
விடை ஆ

193. சிறுபுல்லில் உறங்கும் எதனைப் போல் மகள் தெரிகிறாள்?
அ) மழைத்துளி
ஆ) குருவி
இ) வண்டு
ஈ) பனி
விடை - ஈ

194. தூரத்து மரங்கள் மகளைப் பார்த்து என்ன கூறியது?
அ) தேவதை
ஆ) கடவுள்
இ அழகி
ஈ) மாரி
விடை: அ

195. கோயில் தெய்வத்தை விட மகளின் சிறப்பாக தந்தை நினைத்தது என்ன
அ) நடை
ஆ) முத்தம்
இ புன்னகை
ஈ) அறிவு
விடை – இ

196. மகளின் முகத்தைப் பார்க்கும்போது சிறியதாகத் தெரிந்தது..
அ) மலை
ஆ) அருவி
இ உலகம்
ஈ) நிலா
விடை - ஈ

197. நிலா மகளிடம் கேட்டது என்ன ?
அ) சிரிப்பு
ஆ) உணவு
இ) வெளிச்சம்
ஈ) அழகு
விடை - இ

198. மகள் கையில் பிடித்து எதற்கு ஆறுதல் கூறினாள்?
அ) பட்டாம்பூச்சி
ஆ) நிலா
இ) பூ
ஈ) கிளி
விடை: ஆ

199. 'தீண்டப்படாத முத்தம்' என்ற நூலின் ஆசிரியர் யார்?
அ) இளம்பிறை
ஆ) சுகிர்தராணி
இ மாலதி மைத்ரி
ஈ) சல்மா
விடை: ஆ

200. கவிஞர் சுகிர்தராணியின் நூலின் பெயர் அனைத்துக் கவிதைகளும் ஆங்கிய தொகுப்பு:
அ) சூடிய பூ சூடுக
ஆ) அவளை மொழிபெயர்த்தல்
இ) இப்படிக்கு ஏவாள்
ஈ) கைப்பிடித்து என் கவிதை
விடை: அ

201. சுகிர்தராணி பெண்ணுடல் விடுதலை பெறாமல் என்கிறார்.
சாத்தியமில்லை
ஆ) பெண் விடுதலை
அ) தலித் விடுதலை
இ சமத்துவம்
ஈ) பொருளாதாரம்
விடை - ஆ

202. சுகிர்தராணியின் முதல் கவிதை நூல் எது?
அ) இரவு மிருகம்
ஆ) காமத்திப்பூ

இ) இப்படிக்கு ஏவாள்
ஈ) கைப்பிடித்து என் கவிதை
விடை - ஈ

203. பெண் கவிஞர்களுள் 'மக்கள் கவிஞர்' எனப்படுபவர் யார்?
அ) தாமரை
இ சுகிர்தராணி
ஆ) திரிசடை
ஈ) பரமேசுவரி
விடை: இ

204. தோள்களின்மீது வந்தமரும் பறவையென சுகிர்தராணி எதைக் குறிப்பிகி◌ேறன்
அ) கிளி
ஆ) செம்பறவை
இ மைனா
ஈ) நாரை
விடை: ஆ

205. தலைவனின் கண்களுக்குள் கூடிக்கிடந்த வியர்வைத் துளிகள் எக்காலத்தை சேர்ந்தவை?
அ) குளிர்காலம்
இ வேனிற்காலம்
ஆ) பனிக்காலம்
ஈ) மழைக்காலம்
விடை: இ

206. நுழையும் வழியற்ற காதல் கடற்கரை மேடுகளில் காணப்பட்ட எதலலப போல உலர்கின்றது?
அ) புல்வெளிகள்
ஆ) படகு
இ வலை
ஈ) மீன்
விடை - இ

207. காதலன் மீது கொண்ட அன்பு மணலில் அழுத்திய ------- போன்றது
அ) சங்கு
ஆ) முள்

இ) சிப்பி

ஈ) நண்டு

விடை: அ

208. ஈரத்தால் கிழித்த கன்னங்கள் எதனைப் போல இருந்தது?
போன்றது.
அ) கிளிஞ்சல்
ஆ) நீரின் நுரை
இ அலையாத்திப்பூ
ஈ) மணல்
விடை: இ

209. ஈரத்தால் கிழித்த கன்னங்களைப் பெண் எதற்குள் பதித்து வைத்துள்ளார்?

அ) மனம்

ஆ) கடற்கரை மணல்

இ) தண்ணீர்

ஈ) சங்கு

விடை: ஆ

210. உலர்ந்த இரு உதடுகள் எங்கும் பறந்தன?

அ) வானம்

ஆ) கடல்

இ பாலைவனம்

ஈ) காடு

விடை - இ

211. சருகெனப் பறந்தது எது?

அ) மணல்

ஆ) இலை

இ பூ

ஈ) உதடுகள்

விடை: ஈ

**அலகு-3**

ST. JOSEPH'S COLLEGE FOR WOMEN

## சிறுகதைகள்

1. ருக்மணி எப்பொழுதும் இரவுநேரம் தங்கும் இடம் எது?
அ) சத்திரம்
ஆ ஆலமரம்
இ) வேப்பமரம்
ஈ) இரயில் நிலையம்
விடை: அ

2. ஆலமரத்தடியில் முறுக்கு விற்கும் பெண்ணின் பெயர் என்ன?
அ) வசந்தா
ஆ) கலா
இ முனியம்மாள்
ஈ) கனியம்மாள்
விடை : இ

3. ருக்மணியின் தொழில் யாது?
அ) சேர் பின்னுதல்
ஆ) பத்தி விற்றல்
இ) பேனா விற்றல்
ஈ) கூடை முறம் பின்னுதல்
விடை : ஈ

4. ருக்மணியின் தாத்தா பெயர் என்ன?
அ) கருப்பையா
ஆ) செங்கேணி
இ) சிவந்தகனி
ஈ) மணிமாறன்
விடை : ஆ

5. யாருடைய இனிமையான குரல் ருக்மணியை வசீகரித்தது?
அ) கண்ணப்பன்
ஆ) முனியப்பன்
இ ஆண்டியப்பன்
ஈ) ஓடப்பன்
விடை : அ

ST. JOSEPH'S COLLEGE FOR WOMEN

6. ருக்மணியின் காதலன் தனது சாதி என்னவென்று கூறுகின்றான்?
அ) தேவர்
ஆ) படையாச்சி
இ) வன்னியர்
ஈ) இடையர்
விடை : ஆ

7. மல்வாட்டை என்பது எதனைக் குறிக்கும் சொல்
அ) நிலக்கடலை
ஆ) துவரம்பருப்பு
இ) உளுந்து
ஈ) எள்
விடை : அ

8. தீப்பெட்டியில் தாளம் தட்டியவாறு பாடிய பாடல் எது?
அ) உனைப் பார்த்த பின்பு நான்
ஆ) உனக்காகவே உயிர் வாழ்கிறேன்
இ உன் அழகைக் காண இரு கண்கள் போதாதே
ஈ) உனக்காக பிறந்தேனே அழகாக
விடை : இ

9. கண்ணப்பன் என்னத் தொழில் செய்ய கற்றுக்கொண்டதாய் கூறுகின்றான்?
அ) பலகை
ஆ) புல்லாங்குழல்
இ) மெழுகுவர்த்தி
ஈ) தையல்
விடை : ஆ

10. நீதான் எனக்கு கண்ணு என யாரைப் பார்த்து கண்ணப்பன் கூறுகின்றான்?
அ) முனியம்மாள்
ஆ) சீனியம்மாள்
இ) கனியம்மாள்
ஈ) ருக்மணி
விடை : ஈ

11. கடிதம் என்ற சிறுகதையில் வரும் எழுத்தாளர் பெயர்

என்ன?
அ) சுந்தரவேலு
ஆ) குமரவேலு
இ) சிங்காரவேலு
ஈ) ராஜாவேலு
விடை : இ

12. எதனை நினைத்து இலக்கிய கர்த்தா நொந்து கொண்டார்?
அ) மக்கள் நிலை
ஆ) கலி  காலம்
இ பாமரதனம்
ஈ) வறுமை
விடை : ஆ

13. இலக்கிய கர்த்தாவுக்கு ஊக்கமளிக்கும் உணவு எது?
அ) நேர்மையான புகழ்
ஆ) கல்வி ஞானம்
இ பணம்
ஈ) விருந்து
விடை : அ

14. எழுத்தாளர் சிங்கார வேலுவின் நண்பர் பெயர் என்ன?
அ)  மணி
இ) பிச்சை
ஆ) சேகர்
ஈ) சுந்தரம்
விடை : ஈ

15. எழுத்தாளருக்கு எவ்வூரிலிருந்து கடிதம் வந்தது?
அ) விசாகப்பட்டி
ஆ) உசிலம்பட்டி
இ ஆண்டிப்பட்டி
ஈ) சிம்மக்கல்
விடை : அ

16. எழுத்தாளரின் எந்த சிறுகதை வாழ்க்கையின் உயிர்ப்பு
ஓவியமாக இருந்தது என சிறுகதை குறிப்பிடுகிறது?
அ) கடவுளும் கந்தசாமிப்பிள்ளையும்
ஆ) ஆண்மை
இ கல்யாணி
ஈ) சாலாவின் சங்கடங்கள்

விடை : ஈ

17.எழுத்தாளருக்கு கடிதம் எழுதிய வாசகரின் பெயர் யாது?
அ) விதேயன் நாகப்பன்
ஆ சங்கரன்
இ சின்னசாமி
ஈ) வேலு
விடை : அ

18. தமிழில் சிறுகதைத் தந்தை என்ற புகழுக்கு உரியவர் யார்?
அ) சோதர்மன்
ஆ) நா.பிச்சைமூர்த்தி
இ) ஜெயகாந்தன்
ஈ) புதுமைப்பித்தன்
விடை : ஈ

19. கதையில் வரும் எழுத்தாளர் லதாவின் பெண் பிள்ளை பெயர் என்ன?
அ) சாரதி
ஆ) பாரதி
இ லட்சுமி
ஈ) ஈஸ்வரி
விடை : ஆ

20. அதிகாலையில் கடைக்கு செல்ல வேண்டும் நீ என்று யார் கூறுகின்றாள்?
அ) மணியின் தாய்
ஆ) கனியின் தாய்
இ) ரவியின் தாய்
ஈ) குமார் தாய்
விடை : இ

21. கதையிலுள்ள கதாப்பாத்திரத்திற்கு எரிச்சல் ஊட்டுவது எது?
அ) செயற்கை பூந்தொட்டிகள்
ஆ) இயற்கை பூந்தொட்டிகள்
இ) மரம் செடிகள்
ஈ) வயல் வெளிகள்
விடை : அ

22. தாய்மை என்பது சரியான ஜனன உற்பத்திச் சாலை என எதனைக் குறிப்பிடப்படுகிறது?

அ) கருத்தரித்தல்
ஆ) உயிர்ப்பித்தல்
இ) இறந்து போதல்
ஈ) வாழ்தல்
விடை : அ

23. இன்றைய தொடர் நாடகம் அத்தனை பேரையும் எதுபோல் ஆக்கிரமிக்கிறது?
அ பேய்
ஆ) பூதம்
இ பிசாசு
ஈ) ராட்ஷசன்
விடை : ஆ

24. ஜன்னலில் உள்ள செடியில் எதனைப் போல செம்மொட்டு இருந்தது?
அ) கண்ணீர் துளி
ஆ நீர்த்துளி
இ) இரத்தத்துளி
ஈ) தேன்துளி
விடை :இ

25. விஞ்ஞான காலத்தில் எவ்வாறு குழந்தை பிறப்பு எப்படி சாத்தியமாகிறது?
அ) கருமுட்டை மூலம்
ஆ) அல்ட்ராஸ்கேன் மூலம்
இ) சோதனைக்குழாய் குழந்தை
ஈ) இயந்திர சோதனைமூலம்
விடை : இ

26. சாக்கடை அள்ளுபவனுக்கு குளிர்ந்த நீர் தந்த பெண்ணின் பெயர் என்ன?
அ) மீனாட்சி
ஆ) காமாட்சி
இ) விசாலாட்சி
ஈ) ராமாயி
விடை : ஆ

27. தன் மாமியாருக்கு பெட் பேன் வைத்த தாய்மை உணர்வுடைய பெண் யார்?
அ) செவந்தி

ஆ) கீதா
இ கீர்த்தனா
ஈ) வசந்தி
விடை : ஈ

28. லதா எழுதிய கதை நோட்டை தாய் எவ்விடம் தூக்கி எறிந்தாள்?
அ) தெருவில்
ஆ) சாலையில்
இ பரணியில்
ஈ) குப்பையில்
விடை : இ

29. நாகாவிற்கு கவலைப்படாதே! தைரியமாயிரு என்று சொன்னவள் யார்?
அ) கயல்விழி
இ) பிரேமா
ஆ) சகுந்தலா
ஈ) கனகா
விடை : அ

30. தி.ஜானகிராமன் தம் சிறுகதையில் எதனை மையப்படுத்தியுள்ளார் ?
அ நேர்மைகுணம் உடைய ஆசிரியர்
ஆ) கண்டிப்பான ஆசிரியர்
இ) போலிகுணம் உடைய ஆசிரியர்
ஈ. வகுப்பிற்கே வராத ஆசிரியர்
விடை: அ

31. தி.ஜானகிராமன் பிறந்த மாவட்டம் எது?
அ) திருவண்ணாமலை
ஆ) திருச்சிராப்பள்ளி
இ) திருவாரூர்
ஈ) தஞ்சாவூர்
விடை : இ

32. அனுகூலசாமியின் மனைவி பெயர் என்ன?
அ) மகிமை
ஆ) மேரி
இ) ஜெனிபர்
ஈ) லிசா

விடை : அ

33. அனுகூலசாமியினால் தண்டிக்கப்பட்ட மாணவன் பெயர் என்ன?
அ) ஆறுமுகம்
ஆ) பொன்னையா
இ முனுசாமி
ஈ) சின்னையா
விடை : ஈ

34. அனுகூலசாமிக்கு முள்முடியாய் தாங்கியது எச்செயல்? - குறிப்பிடுக.
அ) பொன்னையா தண்டிக்கப்பட்டது
ஆ) கன்னையாவை தண்டித்தது
இ) சின்னையாவை தண்டித்தது
ஈ) ராமசாமியை தண்டித்தது
விடை இ

35. முனுசாமி எத்தொழில் செய்பவன்?
அ) காய்கறி வியாபாரம்
ஆ) கருவாடு விற்பனை
இ லாடம் அடிப்பது
ஈ) வண்டி ஒட்டுவது
விடை : இ

36. முனுசாமிக்கு அடைமொழியாக வரும் பெயர் என்ன?
அ) கண்ணூர்
இ பில்லூர்
ஆ) முள்ளூர்
ஈ) கல்லூர்
விடை : இ

37. முனுசாமி தான் வைத்திருக்கும் லாடம் ஆணி எல்லாம் எங்கிருந்து வருவதாக சொல்லுவான்?
அ) மெட்ராஸ்
ஆ) மதுரை
இ) மண்பாறை
ஈ) சென்னிமலை
விடை : அ

38. மாடுகள் ஓட்டம் ஓடினாலும் ஆட்டம் ஆடினாலும் நகங்களை உடும்புப் பிடியாக பிடித்து இருப்பது எது?
அ) கயிறு, மணி
ஆ) லாடம், ஆணி
இ) சலங்கை, மூக்கணங்கயிறு
ஈ) கடிவாளம், லாடம்
விடை : ஆ

39. விற்கும் விலைவாசியில் மாட்டிற்கு தீனி போட முடியவில்லை என்று யார் சொல்கிறார்?
அ) வசந்தன்
ஆ) கருப்பன்
இ) கோபால்
ஈ) தனபால்
விடை : ஆ

40.மாடசாமி தந்தை இறந்ததற்கு எத்தனை ஆயிரம் ரூபாய் லோன் போட்டான்?
அ) ஆயிரம்
ஆ) ஆயிரத்தி ஐந்நூறு
இ) இரண்டாயிரம்
ஈ) நாலாயிரம்
விடை : அ

41. மாடசாமியின் மகள் பெயர் என்ன?
ஆ) கனிமொழி
ஆ) ஸ்டெல்லா
இ) தேன்மொழி
ஈ) அருள்மொழி
விடை :ஆ

42. மகள் ஸ்டெல்லாவுக்கு எத்தனை பவுன் சங்கிலி செய்து போட்டான் மாடசாமி?
அ) பத்து பவுன்
ஆ) ஆறு பவுன்
இ) எட்டு பவுன்
ஈ) ஐந்து பவுன்

விடை :ஈ

43.மாடசாமிக்கு யாரிடமிருந்து கடிதம் வந்தது?
அ) செவ்வந்தி
ஆ) தமயந்தி
இ ருக்மணி
ஈ) பத்மினி
விடை :ஆ

44.திருமண வயதினை கடந்துவிட்டதாக தமயந்தியை யார் குறிப்பிடுகிறாள்?
அ) திருமதி பொன்னுசாமி
ஆ) திருமதி கந்தசாமி
இ) திருமதி மாடசாமி
ஈ) திருமதி ராமசாமி
விடை : இ

45. தமயந்தியின் தங்கை பெயர் என்ன?
அ) கல்யாணி
ஆ கவிதா
இ ரூபா
ஈ) சோபா
விடை : அ

46.மாடசாமிக்கு எத்தனை வயதிருக்கும்பொழுது அவன் தாயார் இறந்தார்?
அ) ஐந்து
ஆ) ஆறு
இ நான்கு
ஈ) மூன்று
விடை : ஈ

47. பெஸண்ட் நகரில் உள்ள கோவிலின் பெயர் என்ன?
அ) வழிவிடு முருகன்
ஆ) துர்கை
இ) வரசித்தி விநாயகர்
ஈ) சிவன்
விடை : இ

48. சமையலறையின் கிழக்குப்புறம் உள்ள மலைக்கோயில் எது?

அ) துர்க்கையம்மன் கோயில்
ஆ) மகாமந்திர்
இ சிவன் கோயில்
ஈ) பிள்ளையார்கோவில்
விடை : ஈ

49. பித்த வெடிப்புக்கு ஜீஜி என்ன மருந்து கொடுப்பாள்?
அ) விளக்கெண்ணெய்
ஆ) சைபால்
இ) மஞ்சள்தூள்
ஈ) மெழுகு களிம்பு
விடை : ஈ

50. மசாலாக்கள் தடவப்பட்டுத் தயிரில் எதனை ஊற வைப்பர்?
அ) மாமிச துண்டங்கள்
ஆ) மீன் துண்டங்கள்
இ) இறால் துண்டு
ஈ) கோழித்துண்டு
விடை: அ

51. அஜ்மீர் மக்களின் குலதெய்வம் யார்?
அ) சிவன்
ஆ) ஜெய்அம்பே
இ கருப்பன்
ஈ) ஶ்ரீதேவி
விடை: ஆ

52. குல தெய்வத்திற்கு உரிய பிரசாதம் எது?
அ) மது
ஆ) நெல்
இ) லட்டு
ஈ பூந்தி
விடை : அ

53. மதுவை குடிக்கும் மலைவாழ் மக்கள் என்ன சொல்லிவிட்டு குடிப்பது வழக்கம்?
அ) ஜெய் அம்பே
ஆ) ஜெய் கணேஷ்
இ) ஜெய் ஆஞ்சிநேயா
ஈ) ஜெய் மாதா
விடை: அ

54.அஜ்மீரிலேயே தயாராகும் ஆரஞ்சு வண்ண மதுவின் பெயர் என்ன?
அ) ரம்
